விளங்கி துலங்கி வரும் என்னுயிர் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து, இந்தியத் துணைக் கண்டத்திலே முதல் மாநிலமாக இருக்கக்கூடிய தமிழகத்திலே முதல் வேளாண்மைக் கொள்கையை அவைத் திருமுன் வைப்பதிலே பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் வேளாண் வளர்ச்சியை மையமாகக் கொண்டே சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அமைந்திருக்கின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி வேளாண்மை மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் உள்ளது. எனவே தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ரெக்கார்ட் பண்ணிவிட்டோம். பின்வருமாறு இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் கொடுத்திருப்பது அப்படியே ரெக்கார்ட் ஆகிவிடும். மேற்கொண்டு ஏதாவது தொடர்ந்து சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் கொள்கை என்ற கொள்கை புத்தக வடிவிலே இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே உள்ள தமிழ்க் குறிப்பை *நான் இந்த அவையிலே படித்ததாகக் கொண்டு அவைக்குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நிறைவேற்றப்பெற வேண்டும் என்று கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, அவை ஏற்பளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சட்டமுன்வடிவு அல்ல, தீர்மானம். அந்தக் கொள்கை அறிவிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார். நாம் ஏற்பளிக்க இருக்கிறோம். "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தமிழ்நாடு வேளாண் கொள்கை பிரகடனத்திற்கு ஏற்பளிப்பு தரவேண்டும்" என்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

*பக்கங்கள் 675 முதல் 679 வரை இணைப்பு 3 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS